தினமணி

**முட்டை விலை 5 காசுகள் வீழ்ச்சி**

First Published : 15 Mar 2011 12:06:47 PM IST

நாமக்கல், மார்ச் 14: நாமக்கல்லில் முட்டை ஒன்றின் விலை 5 காசுகள் திடீரென குறைந்து, ரூ. 2.33 ஆக நிர்ணயிக்கப்பட்டது. திங்கள்கிழமை நடைபெற்ற நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

நாமக்கலில் நாள்தோறும் 2.75 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழக மக்களின் பயன்பாட்டுக்காக 75 லட்சம் விநியோகிக்கப்படுகிறது. மீதமுள்ள 2 கோடி முட்டைகள் பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. கடந்த வாரம் முதல் வடமாநிலங்களிலும், தமிழகத்திலும் தட்பவெப்பநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கடுமையான குளிர்காலம் முடிவுற்று கோடை காலம் தொடங்கியுள்ளது. உடலின் உஷ்ணத்தை முட்டை அதிகரிக்கும் என்பதால், பெரும்பாலானோர் கோடை காலத்தில் முட்டை உண்பதை தவிர்க்கின்றனர். இதனால் முட்டையின் நுகர்வு பெருமளவு குறைந்து வருகிறது. இதன் விளைவாக முட்டையின் விலையும் கடுமையான சரிவை கண்டுள்ளது. இதுகுறித்து கோழிப் பண்ணையாளர்கள் கூறியது: கோடை காலத்தில் ஏற்படும் வெப்ப அயற்சி நோயால் கோழிகள் அதிக எண்ணிக்கையில் இறக்கின்றன. அதே சமயத்தில் முட்டையின் நுகர்வு குறைந்துவிட்டது. எனவே அதன் விலை மேலும் சரிவை சந்திக்காமல் தடுக்கத் துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றனர்

**ஈரோடு மஞ்சள் விலை நிலவரம்**

First Published : 15 Mar 2011 12:09:28 PM IST

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

தனிவிரலி - ரூ.9,267- 10,949

தனிகிழங்கு -9,209- 10,189

வெளிச்சந்தை

தனிவிரலி - 8,100-12,396

தனிகிழங்கு - 8,001-12,386

தினமலர்

நவீன தொழில்நுட்பம்

பதிவு செய்த நாள் : மார்ச் 16,2011,00:00 IST

**புதிய கொய்மலர் ஹெலிகோனியம்:** ஹெலிகோனியா கொய்மலர் "கிளிமலர்', கிளி வாழை, பொய் வாழை என்று அழைக்கப்படுகிறது. இம்மலர் கொய்மலராகவும், மேடை அலங்காரம், கல்யாண வரவேற்பு ஆகியவற்றில் அழகுக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. தோட்டங்கள் மற்றும் பூங்காக்களில் அழகுக்காகவும் வளர்க்கப்படுகிறது.

இந்தியாவில் 50 சதவீத உற்பத்தி ஆந்திராவில் உள்ளது. மேற்கு கோதாவரி மாவட்டத்தில் உற்பத்தி ஆகிறது. சமீபகாலமாக கேரளா, கர்நாடகாவில் பிரபலமடைந்து வருகிறது. தற்போது தமிழகத்தில் பிரபலம் அடைந்துவரும் ஒரு முக்கிய கொய்மலரான ஹெலிகோனியம் காற்றில் ஈரப்பதம் உள்ள இடங்களில் செழித்து வளரும். இது கடல் மட்டத்திலிருந்து 500 மீட்டர் உயரம் வரை உள்ள பகுதிகளிலும் வெப்பமண்டல பகுதிகளிலும் பயிரிடப்படுகிறது. இதன் வளர்ச்சிக்கு 25-30 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை தேவைப்படும். இம்மலர் திறந்தவெளியில் அதிக வெளிச்சம், நீர்ப்பாசன வசதி கொண்ட இடங்களில் நன்கு வளரும்.

ஹெலிகோனியாவில் சில ரகங்களின் பூக்கள் கொத்தாகவும், ஒரு சில ரகங்களின் மலர்கள் தலைகீழாகவும் மலரும் தன்மை உடையவை.ஹெலிகோனியாவில் ஆன்ட்ரோபிடா, அலெக்ஸ்ரெட், டிவார்ப் ஜமைக்கா, மேடி டி, லாத்திஸ்பேத்தி, பிளாக் செர்ரி, கென்யாரெட், ஸ்ட்ராபெரி கிரீம் ஆகிய ரகங்கள் சமீபகாலமாக பயிரிடப்படுகின்றன.

ஹெலிகோனியா நல்ல வடிகால் வசதி கொண்ட, எல்லா சத்துக்களும் நிறைந்த நிலத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. மணல் கலந்த வண்டல் மண்ணில் நன்கு வளரும் இம்மலர் 6 முதல் 7 வரை உள்ள கார அமிலத் தன்மையுடைய மண்ணில் வளர்கிறது. இம்மலர் கிழங்குகள் மூலம் பயிர்

பெருக்கம் செய்யப் படுகிறது. கிழங்குகளை 90 து 90 செ.மீ. இடைவெளியில் 1 அடி நீள, அகல, ஆழமுள்ள குழிகளை எடுத்து அதில் மக்கிய இலைகள், பண்ணைக் கழிவுகளைக் கொண்டு நிரப்பி, வயலில் நடவு செய்ய வேண்டும். ஜூன் மாதம் நடவு செய்வது நல்லது. நன்கு மக்கிய தொழு உரம் 1 சதுர மீட்டருக்கு 4 கிலோ அளவில் இடவேண்டும். வாழை, தென்னை போன்ற தோட்டப்பயிர்களில் ஊடுபயிராக பயிரிடப்படுவதன் மூலம் கூடுதல் வருமானம் பெறலாம்.

வெயில் காலங்களில் 2-3 நாட்களுக்கு ஒரு முறையும், மழை பெய்யும்போது வாரம் ஒரு முறையும் நீரைக் கூட்டவேண்டும். நீர் பற்றாக்குறை ஏற்படும்பொழுது இலைகள் நீளவாக்கில் சுருண்டு காணப்படும். நிலப்போர்வை அமைப்பதன் மூலம் களைகளைக் கட்டுப்படுத்தி, மண்ணில் ஈரப்பதம் காக்கப்படுகிறது. நீர் தேங்கி இருப்பின் வேர் அழுகல் நோய் உருவாகும்.

குளிர்காலங்களில் அதிகப் படியான நிழலினால் மலர் வருவது தாமதப்படும். வெப்பமண்டலப் பகுதிகளில் மழைக் காலங்களிலும், மிதவெப்ப மண்டலப் பகுதிகளில் கோடைக்காலம், மழைக்காலங்களிலும் மலர்கள் மலரும். ""வவ்வால்'' மலரின் மகரந்த சேர்க்கைக்கு உதவுகின்றன. பொதுவாக ஹெலிகோனியா 8 மாதங்களில் அதாவது ஜனவரி மாதத்தில் நடவு செய்தால் செப்டம்பர் முதல் டிசம்பர் வரை உள்ள காலங்களில் மலரும்.

அதற்கடுத்த வருடத்திலிருந்து ஏப்ரலிலிருந்து தொடங்கி டிசம்பர் வரை தொடரும். மொட்டு உருவானதிலிருந்து 15ம் நாள் முதல் அறுவடை செய்யலாம். முதல் வருடம் விளைச்சல் குறைவாகக் காணப்படும். அறுவடை செய்யும்போது பூத்தண்டின் நீளம் 70 செ.மீ. முதல் 1 மீ. வரை இருக்க வேண்டும். பூச்சாடிகளில் இதன் வாழ்நாள் 15 முதல் 20 நாட்கள் வரை இருக்கும். ஒரு மலரின் விலை ரூ.7 முதல் 20 வரை சந்தையில் விற்கப்படும். மலரின் விலை ரகத்திற்கு ரகம் மாறுபடும். **(தகவல்: சங்கரி.அ,** மா.ஆனந்த், ரா.அருள்மொழியான், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், ஏற்காடு-636 602. 94432 06004)டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**பல்லடம் பகுதியில் பசுமையான கொத்தமல்லி கீரை**

பதிவு செய்த நாள் : மார்ச் 16,2011,00:00 IST



பல்லடம் பகுதியில் கரிசல் மண் பகுதி அதிகமாக உள்ளது. கரிசல் மண் பகுதியில் கொத்தமல்லி கீரை பாசனப்பயிராக சாகுபடி செய்யப்படுகின்றது. பல்லடம் பகுதியில் விவசாயிகள் மிகவும் கவனத் தோடு பாடுபட்டு ஏக்கரில் நம்ப இயலாத அளவிற்கு மகசூல் எடுக்கின்றனர். விவசாயிகள் குளிர் காலத்திலும், கோடை யிலும் கொத்தமல்லியை கீரைக்காக மட்டும் சாகுபடி செய்கின்றனர். தான்ய உற்பத்தியாக செய்வதில்லை. குளிர்கால சாகுபடி நவம்பரில் துவங்குகின்றது. மாசி, பங்குனியில் கோடை சாகுபடி செய்யப் படுகின்றது. இந்தக் கட்டுரையில் குளிர்கால சாகுபடி பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**சாகுபடி முறைகள்:** சாகுபடி நிலத்தை கட்டிகள் இல்லாமல் நன்றாக டிராக்டர் கொண்டு உழுது சமன்படுத்தி பின் பாத்திகள் அமைக்கப்படுகின்றது. பார் சால் போட்ட நிலத்தில் பாரின் மீது நேர்கோடுகள் போட்டு அந்த கோட்டில் விதைகளை வரிசையாகப் போட்டு மண்கொண்டு மூடப் படுகின்றது. பின் பாரின் மேல் கரண்டியால் கீறி நீர் பாய்ச்சப் படுகின்றது. விதைத்த 10-12 நாட்களில் விதைகள் சீராக முளைத்துவிடும். நீர் பாய்ச்சிய 10-12 நாட்களில் களைக்கொல்லி (ஆக்சிகோல்ட்) அடிக்கப்படுகின்றது. இதனை மிகவும் கவனமாகவும் விஞ்ஞானி களின் சிபாரிசுகள்படியும் செய்யப்படுகின்றது.

தவறு நேர்ந்தால் விதைகள் முளைப்பதில் கடும் பாதிப்பு ஏற்படும். கோடைப்பட்ட சாகுபடியில் களைக் கொல்லிகள் உபயோகப்படுத்துவதே கிடையாது. சாகுபடியில் 20ம் நாள் 17:17:17 உரம் ஏக்கருக்கு 150 கிலோ இடப்படுகின்றது. பயிர் பாதுகாப்பிற்கு "பர்பெக்ட்' "மானோகுரோட்டோபாஸ்' கவனமாக தெளிக்கப்படுகின்றது. விவசாயிகள் இலைவழி உரமாக 19:19:19ஐ 50 கிராம்/டாங்க் 30வது நாளில் தெளிக்கப்படுகிறது. விவசாயிகள் சிறந்த ரகத்தை

சாகுபடி செய்ய முயற்சிகள் எடுக்கின்றனர். உபயோகிக்கும் விதை விதைத்த 8 நாட்களில் பழுது இல்லாமல் முளைக்க வேண்டும். விதைபோட்டு அது அறுவடைக்கு வரும்போது அனைத்து இலைகளும் ஒரே சீரான மற்றும் அழகிய இலைகளாக காட்சிகொடுக்கும். இலையாக விற்பனை செய்தால் அழகு மிக முக்கியம். இவை அனைத்தையும் ஒருசேர கொண்ட ரகம் "ராம் செஸ்' மட்டுமே. இது பூச்சி, மருந்துகள் விற்கும் கடையில் கிடைக்கின்றது. வெற்றிபெற விரும்பும் விவசாயிகள் இந்த ரகத்தை தேர்ந்தெடுத்து சாகுபடி செய்கிறார்கள். பல்லடம் பகுதியில் கொத்த மல்லி கீரைக்கு கேரளாதான் பிரதான மார்க்கெட் ஆகும். மேலும் உள்ளூர் சந்தையும் உண்டு. திருப்பூர், கோவை பகுதிகளில் நல்ல மதிப்பு உண்டு. சிறு கட்டுகளாக மாற்றி விற்னை செய்தால் லாபம் 20% வரை உயரும்.

விவசாயி ஆர்.சிவகுமார், சித்தநாயக்கனூர் பாளையம், கரடிவாவி, சூலூர் தாலுகா, (98650 19625) ஒரு ஏக்கருக்கு சாகுபடி செலவு ரூ.11,600 ஆகும் என்றும் அறுவடைக்கு ஆகும் செலவு, ஆள் கூலி இவைகளை மல்லியை விலைக்கு வாங்கு பவர்களே ஏற்றுக் கொள்கிறார்கள் என்றும் தெரிவிக்கிறார்.

**மகசூல் மற்றும் லாபம்:** கொத்தமல்லி கீரை 50-55 நாட்களில் அறுவடைக்கு வரும். நாட்கள் அதிகமானால் எடை அதிகரிக்கும். எடை அதிகரிக்கும்போது விலை குறைந்துவிடும். ஆனால் 50-55 நாட்களில் அறுவடை செய்தால் இலை நன்றாக கவர்ச்சியாக இருக்கும். இம்மாதிரியான சரக்கிற்கு நல்ல விலை கிடைக்கும். ஏக்கரில் மகசூல் 6000 கிலோ. ஒரு கிலோ விலை ரூ.10 ஆக இருக்கும்போது மொத்த வரவு ரூ.60,000. இதில் சாகுபடி செலவு ரூ.11,600 ஆகும்போது கிடைக்கும் லாபம் ரூ.48,400 ஆகும். சாகுபடியில் இந்த அளவு லாபம் கிட்டுமாவென்று கேட்டபோது, நிச்சயமாக இந்த அளவு லாபம் கிடைக்கின்றது என்று பளிச்சென்ற பதில் பல்லடம் விவசாயிகளிடம் இருந்து கிடைக்கின்றது.
**-எஸ்.எஸ்.நாகராஜன்.**

**வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் (இலைவழி நுண்ணூட்ட உரம்)**

பதிவு செய்த நாள் : மார்ச் 16,2011,00:00 IST

**வாழைக்கு நுண்ணூட்டத்தின் அவசியம்:** வாழையில் சமச்சீராக உரமிடுவது அதிகமான விளைச்சலுக்கும், தரத்திற்கும், நோய் எதிர்ப்பு திறனுக்கும் மிக முக்கியமானதாகும். மிகக் குறைவான விவசாயிகளே நுண்ணூட்டச் சத்தினை தங்கள் தோட்டங்களில் இடுகிறார்கள். நிலங்களில் குறைவான அளவில் அங்ககச் சத்துக்கள் இருப்பது, அதிக அளவிற்கு பேரூட்ட

ரசாயன உரங்களைப் பயன்படுத்துவது, உயர் விளைச்சல் ரகங்களைப் பயிரிடுவது போன்ற காரணங்களினால் தற்போது நுண்ணூட்டச் சத்துக்களின் குறைபாடுகள் விவசாயத்தில் மிகப்பெரிய பிரச்னையாக உள்ளது.

மண்வளம் பாதிக்கப்படுவது, போதிய வேர் வளர்ச்சியின்மை, பாஸ்பரஸ் உரங்களை அதிகமாக பயன்படுத்துவது போன்ற காரணங் களினால் நுண்ணூட்டச் சத்தை மண்ணில் இட்டு நிவர்த்தி செய்வது கடினமானதாகும். மண்ணில் இடப்பட்ட நுண்ணூட்டச் சத்தில் 3 முதல் 5 சதவீதம் மட்டுமே பயிர்களால் கிரகிக்கப்படுகிறது. எனவே விளைச்சல் மற்றும் தரத்தை அதிகப் படுத்துவதற்காக நுண்ணூட்டச் சத்துக்களை இலைவழி தெளித்தல் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத்தில் மிக முக்கியமான அங்கமாகும்.

**வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல்:** வாழை நுண்ணூட்ட ஸ்பெஷலானது பெங்களூரு இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சியில் உருவான தொழில்நுட்பமாகும். இந்த தொழில் நுட்பத்தை பயன்படுத்தி தேனி மாவட்டம் காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தில் வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் தயாரிக்கப்படுகின்றது.
வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் தெளிப்பதால் உண்டாகும் பயன்கள்: * நுண்ணூட்டக் குறைபாடு உடனே நிவர்த்தியாகிறது. * உரத்தின் பயன்பாடு குறைகிறது. * பயிரின் வளர்ச்சி துரிதப் படுத்தப்படுகிறது. * நல்ல தரமான பெரிய வாழை குலை கிடைக்கிறது.
கலவையில் உள்ள முக்கிய நுண்ணூட்டங்கள்: துத்தநாகம்-3%, போரான்-1.5%, மாங்கனீஸ்-1%, இரும்பு-1.5%.

**வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் உபயோகிக்கும் முறை:** * வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் 50 கிராம், ஒரு சாம்பு பாக்கெட் மற்றும் ஒரு எலுமிச்சை பழத்தின் சாறு ஆகியவற்றை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து பயன்படுத்த வேண்டும். *வாழை நட்ட 5வது, 6வது, 7வது, 8வது, 9வது மற்றும் 10வது மாதங்களில் வாழை நுண்ணூட்ட ஸ்பெஷலை தெளிக்க வேண்டும்.
* வாழை குலை தள்ளிய பின் முதல் மற்றும் இரண்டாவது மாதத்திலும் குலைகளின் மேல் தெளிக்க வேண்டும். * இந்த வாழை நுண்ணூட்ட ஸ்பெஷலை பூச்சிக் கொல்லி மருந்துடன் சேர்த்தும் தெளிக்கலாம். தாமிரம் கலந்த பூஞ்சாணக் கொல்லி மருந்துடன் மட்டும் கலந்து தெளிக்கக் கூடாது.
* வாழை நுண்ணூட்ட ஸ்பெஷல் கரைசலை தயாரித்ததுடன் தெளிக்க வேண்டும்.

* இந்த நுண்ணூட்ட ஸ்பெஷல் கரைசலை காலை 6 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4மணி முதல் 6.30 மணி வரையிலும் தெளிக்க சிறந்தது. * இலையின் அடிப்பகுதி முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும். குலைகள் முழுவதும் நனையும்படி தெளிக்க வேண்டும்.

இந்த வாழை நுண்ணூட்ட ஸ்பெஷலின் விலை ரூ.125/- கிலோ ஆகும். விவசாயிகள் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர், ப.மாரிமுத்துவை (போன்: 04546-247 564, 94420 25109) தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
பெ.பச்சைமால், சேர்மன், ப.மாரிமுத்து, திட்ட ஒருங்கிணைப்பாளர்,சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையம், காமாட்சிபுரம், தேனி.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 16,2011,00:00 IST

*** விதை இருப்பு நிலவரம்:** ஏ.டி.டி(ஆர்)47 எப்1 விதை: 6.64 டன், விலை ரூ.24/கிலோ. கிடைக்குமிடம்: உழவியல் துறை, வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 106. 0452-242 2956, 242 3046.

**தென்னை நாற்றுக்கள்:** நெட்டை - 2898 எண்ணிக்கை இருப்பு உள்ளது. விலை ரூ.30/கன்று. கிடைக்குமிடம்: வாசனை மற்றும் தோட்டப்பயிர்கள் துறை, தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்-641 003. 0422-661 1284.
மண் புழு உரம்: இருப்பு 750 கிலோ, விலை ரூ.6/கிலோ. கிடைக்குமிடம்: மலரியல் மற்றும் நில எழிலூட்டும் துறை, தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர்-641 003. 0422-661 1230.
நெல் ஆடுதுறை 43 (ஆதார விதை1) - இருப்பு 1822 கிலோ. விலை ரூ.24/கிலோ. கிடைக்குமிடம்: பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்-626 125. 04563-260 736.

*** சிறப்பான வருமானம் தரும் சிவப்புக்கீரை:** கன்னியாகுமரி மாவட்டம் துவரங்காடு கிராமத்தைச் சேர்ந்த சேவியர் ஒரு ஏக்கரில் மீன் வளர்ப்பு, ஒரு ஏக்கரில் மரவள்ளி சாகுபடி, 25 சென்டில் வாழை இவைகளோடு 4 சென்டில் சிவப்புக் கீரையையும் சாகுபடி செய்து வருகிறார். 4 சென்டில் மாதம் ரூ.4000 வரை வருமானம் கிடைப்பதாகக் கூறும் இவர் கடைபிடிக்கும் சாகுபடி நுட்பங்கள்: சிவப்புக்கீரைக்கு வண்டல்மண் ஏற்றது. கீரைகளுக்கு பட்டம் பார்க்க வேண்டிய அவசியமில்லை. சாகுபடி செய்வார்கள். ஆனால் இவர் நாற்று பாவி சரியான இடைவெளியில் நடவுசெய்து நல்ல விளைச்சல் பெற்றுள்ளார்.

20 சதுரடி பரப்பில் மண்ணை நன்றாகக் கிளறி சாம்பல் மற்றும் தொழு உரம் ஆகியவற்றில் தலா 20 கிலோ அளவுக்கு பரப்ப வேண்டும். அதில் விதைகளைத் தூவி விதைத்து பூவாளியால் நீர்

தெளித்து வரவேண்டும். விதைத்த 25ம் நாளுக்கு மேல் நாற்றுகளை எடுத்து நடவு செய்யலாம். 4 சென்ட் நிலத்தை நன்றாக கிளறி, 50 கிலோ சாம்பல், 100 கிலோ தொழு உரம், 1 கிலோ பொடித்த கடலைப் பிண்ணாக்கு, 2 கிலோ பொடித்த வேப்பம் பிண்ணாக்கு ஆகியவற்றைப் பரப்பி கிளறிவிட வேண்டும்.

பிறகு 12 அடி நீளம், இரண்டரை அடி அகலத்திற்கு பாத்திகளை அமைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பாத்திக்கும் இடையில் முக்கால் அடி இடைவெளி வாய்க்கால் இருக்க வேண்டும். வரிசைக்கு வரிசை, செடிக்குச் செடி 7 அலங்குலம் இடைவெளி விட்டு நாற்றுக்களை பாத்தியில் நடவு செய்ய வேண்டும். தண்ணீர் அவசியம் என்பதால் செழும்பாக தண்ணீர் கட்டவேண்டும்.

நடவு செய்த 7ம் நாள் 250 மில்லி மீன் அமிலக்கரைசலை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மீன்கழுவிய தண்ணீரை ஒருநாள் அப்படியே வைத்திருந்து மறுநாள் சரிபங்கு தண்ணீரில் கலந்து செடிகள் மீது வாரம் ஒரு முறை தெளிக்க வேண்டும்.
நடவு செய்த 15ம் நாள் மூலிகை பூச்சிவிரட்டி தெளித்தால் பூச்சிகள் அண்டாது. மகசூல் 10,000 கட்டு கீரை கிடைக்கும். கட்டு 6 ரூபாய்க்கு விற்பனையானாலும் செலவு போக ரூ.40,000 வருமானம் கிடைக்கும். (தகவல்: பசுமை விகடன், 10.3.11, தொடர்புக்கு: சேவியர், 97896 37500) -டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**சம்பங்கி சாகுபடி - விவசாயி அனுபவம் (படம் உண்டு)**
ரகம் - கிழக்கு வீரிய ரகம். பயிரிடும் நிலத்தின் அளவு - தோராயமாக 30 சென்ட். உழவு முறை - வாரம் ஒரு உழவு போட்டு 15 நாட்களுக்கு நிலத்தை ஆறவைக்க, மீண்டும் 15 நாட்களுக்கு ஒரு முறை விதமாக 2 உழவு போடவேண்டும். நன்கு ஆறிய பின் 8 யூனிட் அளவு (4 டிராக்டர்) நன்கு மக்கிய சாணமாக இடவேண்டும். இதை 15 நாட்களுக்கு ஆறவிட வேண்டும். பின் அதை நிலத்தில் நன்கு இறைத்துவிட வேண்டும். இறைத்த பின் ஒரு உழவு விட்டுவிட வேண்டும். கிழங்கின் அளவு 30 சென்ட், 10 மூடை.
**விதை நேர்த்தி**: கிழங்கு வாங்கிக்கொண்டு வந்து வேப்பமரத்தின் நிழலில் உலரவைக்க வேண்டும். உலரவைத்த கிழங்கை 3 நாட்களுக்கு 3 முறையாக கை பார்க்க வேண்டும். அவ்வாறு செய்தால் அருகம்புல் வேர் கோரைக்கிழங்கு மற்ற களைகள் அந்த கிழங்கிலிருந்து முற்றிலும் அகற்றப்படும்.
**பார் அமைக்கும் முறை:** சிறிய சிறிய வாய்க்கால்கள் எடுத்து கால் அடி வீதத்தில் மூன்று எட்டுக்கு ஒரு நெறை வீதமாக மூன்று பாத்திகளாக அமைக்க வேண்டும். ராஜா வாய்க்கால் கரை 2 அடியில் அமைக்க வேண்டும். பாத்தி அரை அடிக்கு ஒரு கரை வீதமாக அமைத்துக் கொள்ள வேண்டும்.
**கிழங்கு நடவுமுறை:** ஒரு அடிக்கு ஒரு இடத்தில் மூன்று, நான்கு கிழங்கை அடிப்பாகம்

பூமிக்குள்ளும் மேல்பாகம் பூமிக்கு மேல்நோக்கி இருக்குமாறு நடவு செய் வேண்டும்.

**நீர்ப்பாசனம்:** கிழங்கு நட்ட பிறகு உடனே நீர் பாய்ச்ச வேண்டும். மண்ணின் தன்மையை பொருத்து கரிசல் மண்ணாக இருந்தால் 5 நாட்களுக்கு ஒரு முறையும் செவ்வல் மண்ணாக இருந்தால் 3 நாட்களுக்கு ஒரு முறையும் நீர் பாய்ச்ச வேண்டும். நான்காவது முறை தண்ணீர் பாய்ச்சியபிறகு களை தோன்ற ஆரம்பிக்கும்.

**களை நிர்வாகம்:** சூழ்நிலைக்கேற்றவாறு 10-15 நாட்களுக்கு ஒரு களை எடுக்க வேண்டும். 30-40 நாட்களில் கிழங்கு முளைப்புத்திறன் வந்துவிடும். களைகள் வந்து கிழங்கினை பாதிக்காதவாறு களைகளை நீக்கி சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

**வளர்ப்பு முறை:** நட்ட 60 நாட்களில் 5-10 செ.மீ. வரை கிழங்கு வளர்ந்துவிடும். நன்கு வளர்ந்தபின் 10-15 செ.மீ. வந்தபின் இயற்கை வேளாண்மை உரம் இடவேண்டும்.

**மேலுரம்:** இயற்கை வேளாண்மை உரத்தை 30 சென்டுக்கு 1 மூடை வீதமாக எடுத்து ஒரு டிரம்மில் போட்டு தண்ணீர் கலக்கி, நீர் பாய்ச்சும்போது ஊற்ற வேண்டும். இவ்வாறு செய்தால் செடி நன்றாக வளர்ந்து கரும்பச்சை நிறத்தில் இருக்கும். பரவலாக அரும்புகள் தோன்றி பூக்கள் வர ஆரம்பிக்கும்.

**உரம் இடும் முறை:** இயற்கை வேளாண்மை உரத்தை 30 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீரில் கலந்து செடிகளுக்கு விடவேண்டும். நன்றாக தண்ணீர் பாயக்கூடிய நிலத்திற்கு மட்டும் பொருந்தும். இவ்வாறு நடவு செய்து களை இல்லாமல் இருக்கும் நிலத்திற்கு நோய் தாக்கும் அபாயம் இல்லை.

**பயிர் பாதுகாப்பு அறை**: 30 நாட்களுக்கு ஒரு முறை 3 லிட்டர் மாட்டு கோமியம், அரைலிட்டர் ஆறியவடிகஞ்சி, பால் 300 மில்லி, மஞ்சள்தூள்-300 கிராம் கலந்து பவர் ஸ்பிரேயர் மூலம் தெளிக்க வேண்டும். இயற்கை உரத்தை பயன்படுத்த இயற்கை முறையில் சாகுபடி செய்தோமானால் பூ நன்றாகவும் பருமனாகவும் இருக்கும். நல்ல மகசூல் கிடைக்கும். நல்ல விலையும் கிடைக்கும்.

**அறுவடை:** எல்லா மாதங்களிலும் வரும்.

**வாழ்நாள்:** 5, 6 வருடம் வரை இருக்கும்.

**தொடர்புக்கு: சவடமுத்து, அலவாச்சிபட்டி, திண்டுக்கல். 98436 32040.**

**-கே.சத்தியபிரபா, உடுமலை.**

தரிசு நிலத்தில் சப்போட்டா சாகுபடி

**மண்:** சப்போட்டா பயிர் எந்த வகை மண்ணிலும் செழித்து வளரக்கூடியது. நல்ல வடிகால் வசதியான மண் ஏற்றது. ஆழமான வண்டல் மண் கலந்த நிலங்கள் மிகவும் உகந்தது. பருவம்: **ஜூலை - ஆகஸ்ட். ரகங்கள்:** கிரிக்கெட் பால், ஓவல், பாராமசி, தகரப்புடி, துவாரப்புடி, கீர்த்தபர்த்தி, பாலா, காளிப்பட்டி, கோ-1, கோ-2, பெரியகுளம் 1, 2, 3. பயிர் பெருக்கம்: ஒட்டுக்கட்டிய செடிகள்

**பின்செய் நேர்த்தி:** ஒட்டுப் பகுதிகளின் கீழே தழைத்துவரும் வேர்ச்செடியின் தளிர்களை அவ்வப்போது அகற்ற வேண்டும். தரை மட்டத்திலிருந்து சுமார் 2 அடி உயரம் வரை கிளைகள் எதுவும் பிரியாமல் பார்த்துக்கொள்வது நல்லது. கிளைகள் மரத்தில் சீராகப் பரவி இருக்க வேண்டும். சப்போட்டா மரத்திற்கு கவாத்து செய்தல் தேவை இல்லை. உயரமாக வளரக்கூடிய ஒரு சில தண்டுகளை மட்டும் நீக்கிவிட வேண்டும். அடர்த்தியான, நிழல் விழும் கிளைகளையும் நீக்கிவிடவும்.
**ஊடுபயிர்:** ஆரம்ப வருடங்களில் மர வரிசைகளுக்கு நடுவே காய்கறிப் பயிர்களையும், குறுகிய காலப் பழப்பயிர்களான பப்பாளி போன்றவற்றையும் சாகுபடி செய்வதன் மூலம் வருமானத்தைப் பெருக்கலாம்.
**அறுவடை மற்றும் மகசூல்:** சப்போட்டா பயிர் வருடத்திற்கு இரண்டு முறை பெரும்பான்மையாக காய்க்கும். ஏப்ரல் முதல் ஜூலை வரை ஒரு முறையும், செப்டம்பர் முதல் நவம்பர் வரை ஓரளவு காய்க்கும். இந்தப் பயிரின் பழ முதிர்ச்சியை அறிவது சிறிது கடினம். இதர பயிர்களைப் போல் இதில் நிறமாற்றம் ஏற்படுவதில்லை. ஆயினும் பழத்தின் தோலில் உள்ள சிறிய சிறிய கருநிறத்துகள்கள் மறைந்து, பழங்கள் சிறிது பளபளவென்றிருக்கும். பழத்தை நகத்தால் கீறிப்பார்த்தால், உள்ளே மித மஞ்சள் நிறம் தெரிய வேண்டும். பால் வடியக்கூடாது. பழத்தின் அடிப்பாகத்தில் உள்ள முள் போன்ற சிறிய நுனி, எளிதில் பிரிந்துவரும். பழத்தோலில் சொரசொரப்பு மாறி மிருதுவாகும். ஒரு எக்டருக்கு 20 முதல் 25 டன்கள் மகசூலாகக் கிடைக்கும்.
தொடர்புக்கு: எம்.அகமதுகபீர், 268/77, பழைய ஹவுசிங் யூனிட், எல்லிஸ் நகர் போஸ்ட், தாராபுரம்-638 657.எம்.அகமது கபீர், பி.எஸ்சி(அக்ரி)., எம்.பி.ஏ.,வேளாண்மை ஆலோசகர், அக்ரி கிளினிக், தாராபுரம். 93607 48542.

**நாட்டுக்கோழி வளர்ப்பில் குறைந்த முதலீடு; அதிக லாபம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 16,2011,01:12 IST

ஈரோடு: "நாட்டுக்கோழி வளர்ப்பதன் மூலம், குறைந்த முதலீட்டில் அதிக லாபம் பெறலாம்' என, பயிற்சியில் விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஈரோடு கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில், நாட்டுக்கோழி வளர்ப்பு குறித்த பயிற்சி நடந்தது. உதவி பேராசிரியர் கிருபாகரன் பேசியதாவது: நாட்டுக்கோழி வளர்ப்பு என்பது, புறக்கடை கோழி வளர்ப்பிலிருந்து வணிக ரீதியாக கொட்டகை அமைத்து வளர்க்கப்படுகிறது. நாட்டின் மொத்த உள்நாட்டு மொத்த முட்டை உற்பத்தியில் 15 சதவீதம் நாட்டு கோழியில் இருந்து கிடைக்கிறது. நாட்டின் மொத்த கோழி இறைச்சி உற்பத்தியில் 18 சதவீதம் கிடைக்கிறது. பருவநிலைக்கு ஏற்ப

நாட்டுக்கோழி முட்டை மூன்று முதல் ஐந்து ரூபாய் வரை விற்கப்படுகிறது. நாட்டுக்கோழி இறைச்சி கிலோ 200 முதல் 230 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

தமிழகத்தில் 18 வகையான நாட்டுக்கோழி இனங்கள் உள்ளது. அவற்றில் அசில், சிட்டஜாஸ், பாஸ்ரா, கடக்நாத் போன்றவை முக்கிய இனங்கள். அசில், சிட்டஜாஸ் போன்ற கோழிகள் சிறந்த சண்டை திறன் கொண்டவை. நாட்டுக்கோழி குஞ்சுகளின் மூக்கை வெட்டுவதால் பல நன்மைகள் உண்டாகின்றன. 15 முதல் 25 நாட்கள் வயதில் குஞ்சுகளின் மூக்கை (அலகு) வெட்ட வேண்டும். மேல் அலகின் நீளமானது கீழ் அலகின் நீளத்தை விட சிறிது குறைவாக இருக்குமாறு வெட்ட வேண்டும். கோழி குஞ்சுகள் சோர்வாக இருக்கும் போது வெட்டக்கூடாது. தடுப்பூசி போட்ட சமயங்களில் மூக்கை வெட்டுதல் கூடாது.

மூக்கு வெட்டும் எந்திரத்தை சரியான முறையில் சுத்தம் செய்து, கிருமி நாசினி தடவி வெட்ட வேண்டும். மூக்கு வெட்டும் சமயத்தில் தீவனத்தில் வைட்டமின் கே-வை சேர்க்க வேண்டும். கோழிக்கு குறைந்தபட்சம் 80 முதல் 200 ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. மூக்கு வெட்டுவதன் மூலம் தீவன விரயத்தை குறைப்பதுடன், கோழிக்குஞ்சுகள் ஒன்றுடன் ஒன்று சண்டை இடாமல் தடுக்கலாம். மூக்கை வெட்டாமல் விடுவதால், ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டு சில சமயங்களில் இறப்பும் நிகழலாம். தகுந்த சமயத்தில் மூக்கு வெட்டுவதால், பண்ணையின் தரத்தை உயர்த்துவதுடன் அதிகமான லாபமும் பெறலாம். இவ்வாறு அவர் பேசினார்.

**பால் வினியோகம் கண்காணிப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 15,2011,23:19 IST

ராமநாதபுரம் : அதிகாலையில் நடக்கும் பால் வினியோகத்தை கண்காணிக்க தேர்தல் சிறப்பு குழுவினர் களமிறங்கியுள்ளனர். தேர்தல் அறிவிப்பை தொடர்ந்து பணபரிமாற்றத்தை தடுக்க பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பணவினியோகத்துக்கு சாதகமான சூழலுக்கு தேர்தல் கமிஷன் பல்வேறு முட்டுக்கட்டை போட்டுள்ளது. அதையும் மீறி அவ்வப்போது பல லகரங்கள் பிடிபட்டு வருகிறது. இந்நிலையில் அதிகாலையில் வீடுகளில் வினியோகிக்கப்படும் பால் குறித்து தேர்தல் அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

இதற்காக பிரத்யேக சிறப்பு குழு அமைத்து, அதிகாலையில் ரகசிய உலா வருகின்றனர். வழக்கத்துக்கு மாறாக சைக்கிள் மற்றும் பைக்கில் வினியோகம் செய்ய வருபவர்கள் குறித்து இதில்

விசாரிக்கப்படுகிறது. பொருட்கள் வினியோகம் நடக்கும் வீட்டில் அத்துடன் கடிதம், சீட்டு, பணம் போன்றவை சேர்க்கப்படுகிறதா என்பதையும் குழுவினர் மறைமுகமாக பார்வையிடுகின்றனர். முன்னதாக அதிகாலை பொருட்கள் வினியோகத்தில் தற்போது ஈடுபடுவர்கள் பற்றிய விபரங்களை சேகரிக்கும் பணி நடந்து வருகிறது.

அதே போல," கேபிள் கட்டணம், மின்சார கணக்கீட்டாளர், கம்பெனி விளம்பரதாரர் போர்வையில் வாக்காளரிடம் பேரம் பேசப்படுகிறதா?,' என்பதையும் இக்குழுவினர் கண்காணிக்கின்றனர். "இது போன்ற செயலில் யாரேனும் ஈடுபட்டால்,தேர்தல் கமிஷனின் குறிப்பிட்ட எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கவும், வலியுறுத்தப்பட்டுள்ளது.

**விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தஅரசு ஊழியர் சங்கம் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : மார்ச் 16,2011,02:14 IST

திருநெல்வேலி:தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் அகில இந்திய எதிர்ப்பு தின ஆர்ப்பாட்டம் பாளை., மார்க்கெட்டில் நடந்தது.ஜார்கண்ட் மாநிலம் தன்பத் நகரில் நடந்த அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் தேசிய செயற்குழு முடிவுக்கு இணங்க கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடந்தது.அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் பாலுச்சாமி தலைமை வகித்தார்.

மாவட்ட செயலாளர் சங்கரவேலாயுதம் கோரிக்கை விளக்கவுரை ஆற்றினார். இன்சூரன்ஸ் ஊழியர் சங்க பொதுச் செயலாளர் முத்துக்குமாரசாமி வாழ்த்துரை வழங்கினார். மாநில செயலாளர் குமாரவேல் சிறப்புரை ஆற்றினார்.விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவேண்டும். ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தீவிரவாதிகள் தாக்குதலை தடுக்கவேண்டும். இந்திய நாட்டு செல்வங்களை கொள்ளை அடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களை ஒழிக்கவேண்டும். ஓய்வூதிய திட்டத்தை தனியார் மயம் ஆக்கக்கூடாது என்பது உள்ளிட்ட கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

## ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தால் இரும்புத் தாது, ரப்பர் விலை சரிவு

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*பொருளாதார வலிமையில் மூன்றாவது இடத்தில் உள்ள ஜப்பான் நாட்டில் ஏற்பட்ட பூகம்பத்தால், நம் நாட்டில் இரும்புத் தாது மற்றும் இயற்கை ரப்பர் விலை சரிவடைந்துள்ளது. இம்மாதம் 14–ந் தேதி அன்று, கடந்த மூன்று மாதங்களில் இல்லாத அளவிற்கு இரும்புத் தாது விலை குறைந்துள்ளது.*

*உருக்கு பொருள்கள் தயாரிப்பில் ஜப்பான் உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது. சென்ற 2010–ஆம் ஆண்டில் 10.96 கோடி டன் இரும்புத் தாது உற்பத்தி செய்துள்ளது.*

**உருக்கு ஆலைகள்**

*பூகம்பத்தால் உருக்கு ஆலைகள் மூடப்பட்டுள்ளதால், ஜப்பானில் உருக்கு பொருள்கள் உற்பத்தி சுமார் 1.80 கோடி டன் வரை குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து, இரும்புத் தாதுக்கான தேவைப்பாடு 2.50 கோடி டன் வரை சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால், இரும்புத் தாது விலை சரிவடைந்துள்ளது.*

*பொருளாதார வளர்ச்சி வேகத்தில் உலக அளவில் முதலிடத்தில் உள்ள சீனாவில், சென்ற பிப்ரவரி மாதத்தில் பயணிகள் கார்கள் விற்பனை 37 சதவீதம் குறைந்துள்ளது. வாகனங்கள் விற்பனை ஒட்டுமொத்தத்தில் 33 சதவீதம் சரிவடைந்துள்ளது.*

*சென்ற திங்கள்கிழமை அன்று இயற்கை ரப்பர் விலை 8 சதவீதம் குறைந்துள்ளது. ஜப்பான் நாட்டில் ஹோண்டா மற்றும் நிஸ்ஸான் உள்ளிட்ட பல முன்னணி நிறுவனங்கள் கார் உற்பத்தியை நிறுத்தி வைத்துள்ளன. இதனால், டயர்களுக்கான தேவைப்பாடு சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற காரணங்களால், இயற்கை ரப்பர் விலை குறைந்துள்ளது.*

***இயற்கை ரப்பர்***

*அதேசேமயம், விலையில் ஏற்பட்டுள்ள சரிவுகள் தற்காலிகமானது என்று பொருளாதார நிபுணர் ஒருவர் தெரிவித்தார். ஏனென்றால், ஜப்பானில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்போது உலோகங்கள், மரங்கள், இயற்கை ரப்பர் போன்றவற்றிற்கான தேவைப்பாடு அதிகரிக்கும். நம் நாட்டிலிருந்து மேற்கொள்ளப்படும் மேற்கண்ட பொருள்கள் ஏற்றுமதி நீண்ட கால அடிப்படையில் அதிகரிக்கும்.*

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,780–2,800

**மணிலா பயறு**

80 கிலோ கொண்ட மூட்டை
3,400–3,450

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
7,350–00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,400–00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின்(வரிஉள்பட) 1,749–00

**நல்லெண்ணெய்**

குமாருரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500–00
டின் (15 கிலோ) 1,700–00

**விளக்கெண்ணெய்**

ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
11,300.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,700–00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,140.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,285.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,100.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
555–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,மார்ச்.15–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 19,000 | 190.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,400 | 88.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு(வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(90கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,900 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,மார்ச்.15–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 12,373
2. ஜெயதர் 22 எம்.எ ரூ. ——
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 16,342
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 15,747
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 16,450
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 16,450
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 22,777

## கோவை உழவர் சந்தை

கோவை,மார்ச்.15–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

**காய்கறிகள் (கிலோவுக்கு)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 60–00 | புதினா | ரூ. | 16–00 |
| கத்தரிக்காய் | ரூ. | 18–24 | காலிப்பிளவர் | ரூ. | 10–12 |
| வெண்டைக்காய் | ரூ. | 7–8 | பொறியல் தட்டை | ரூ. | 14–00 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 6.50–7 | பச்சை மொச்சை | ரூ. | 30–00 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 7–8 | தேங்காய் | ரூ. | 9–12 |
| புடலை | ரூ. | 7–10 | பட்டாணி | ரூ. | 36–40 |
| பீர்க்கான்காய் | ரூ. | 18–20 | பூண்டு | ரூ. | 100–140 |
| சுரைக்காய் | ரூ. | 8–10 | கறிவேப்பிலை | ரூ. | 22–00 |
| பாகற்காய் | ரூ. | 12–13 | அகத்தி | ரூ. | 14–00 |
| கொத்தவரை | ரூ. | 14–00 | வாழைக்காய் | ரூ. | 14–00 |
| பூசணிக்காய் | ரூ. | 16–20 | திராட்சை | ரூ. | 36–00 |
| அரசாணிக்காய் | ரூ. | 10–00 | திராட்சை (பச்சை) | ரூ. | 64–75 |
| மேராக்காய் | ரூ. | 16–00 | குடைமிளகாய் | ரூ. | 30–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 14–00 | சாதா பீன்ஸ் | ரூ. | 20–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 16–00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 30–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 18–20 | கறிபீன்ஸ் | ரூ. | 20–00 |
| பெரியவெங்காயம் | ரூ. | 10–00 | புஸ்பீன்ஸ் | ரூ. | 28–24 |
| இஞ்சி | ரூ. | 32–00 | காளான் | ரூ. | 80–140 |
| முருங்கைக்காய் | ரூ. | 28–32 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10–13 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 15–16 | சப்போட்டா1கிலோ | ரூ. | 16–00 |
| சேனைகிழங்கு | ரூ. | 20–00 | கொய்யா1கிலோ | ரூ. | 22–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24–00 | மாதுளை1கிலோ | ரூ. | 170–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22–00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 15–16 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15–00 | வரமிளகாய் | ரூ. | 90–00 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 14–00 | ஆப்பிள் | ரூ. | 110–00 |
| சிறுகிழங்கு | ரூ. | 30–00 | சாத்துக்குடி | ரூ. | 28–00 |
| முள்ளங்கி | ரூ. | 9–10 | நெல்லிக்காய் | ரூ. | 20–30 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 22–26 | ஆரஞ்சு | ரூ. | 40–00 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 8–10 | வெள்ளரி | ரூ. | 12–26 |
| நூல்கோல் | ரூ. | 18–16 | புளி 1 கிலோ | ரூ. | 80–00 |
| கொத்தமல்லி | ரூ. | 16–00 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30–00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 18–16 | அவரை | ரூ. | 12–14 |
| முட்டைகோஸ் | ரூ. | 8–10 | நிலக்கடலை | ரூ. | 35–00 |
| கலர்கோஸ் | ரூ. | 16–00 | மக்காச்சோளம் | ரூ. | 12–18 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.21400 |
| மிளகு (சேட்டன்) | ரூ.21800 |
| மிளகு (வயநாடன்) | ரூ.22500 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 7100 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 7350 |
| சுக்கு(புதியது) | ரூ.16000 |
| சுக்கு(பழையது) | ரூ.10000 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1250 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9050 |
| கொப்பரை நாடன் | ரூ.6100 |
| கொப்பரை ராசு | ரூ.7000 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6250 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.6600 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6000 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 22500 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23600 |
| ரப்பர் பால் | ரூ. 16500 |
| காப்பி | ரூ. 9250 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5150 |
| நேந்திரகாய் | ரூ. 1350 |
| இஞ்சி | ரூ. 1600 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,மார்ச்.15–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 84.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1130 | 70.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1190 | 74 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | (–) |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 73.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,380 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1420 | 1020.00 |
| என்.கே.எஸ்பிராண்ட் | ரூ. 1,700 | 110.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,020 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,200 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,275 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,025 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,080 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | – |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.350.00 | ரூ. 400.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 1.50 | ரூ. 4.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.12.00 | ரூ.20.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.4.00 | ரூ.6.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.3.00 | ரூ.5.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.6.00 | ரூ.8.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.10.00 | ரூ.13.00 |
| மேராக்காய் | ரூ.7.00 | ரூ.8.00 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

**மஞ்சள் (கோவை)**

தனிவிரலி ரூ.11000–12500
தனிகிழங்கு ரூ.11000–11000

**தேங்காய்**

ரெகமம் ரூ.500–6000

உடுமலை ரூ.500–500

**மக்காச்சோளம்**

உடுமலை ரூ.1040–1050

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,568.00 | 15520.00 | 15560.00 |
| ஒரு கிராம் | 1,946.00 | 1,940.00 | 1,945.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 53,205.00 | 56,700.00 | 57,000.00 |
| ஒரு கிராம் | 57.90 | 56.70 | 57.00 |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.256.00 | அதிகபட்சவிலை | ரூ.306.00 |
| சராசரி விலை | ரூ.215.78 | சராசரி விலை | ரூ.260.35 |
| குறைந்தபட்சவிலை | ரூ.141.00 | குறைந்தபட்சவிலை | ரூ.242.00 |

**பட்டு நூல் ரூ.2,015**